இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரிகம்!!
ஆடிக்க ஆடைகளி
சோபிக்க சோப...
✲ சோபனா ✲
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
✲ சோபனா ✲
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 14 வியாழக்கிழமை (27 – 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 61

# கிழக்கு தேர்தலை முன்னிட்டு பெருமளவு ராணுவம் நகர்வு

## சோதனை நிலையங்களும் அதிகரிப்பு

கொழும்பு, ஜனவரி 27

கிழக்கு மாகாணத்தில் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, அங்கு பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் அனுப்பப்பட்டு வருகின்றனர்,

பொலீஸாருடன் மேலதிகமாக முப்படையினரும் அங்கு குவிக்கப்படுகின்றனர்.

இதே வேளை, மட்டக்களப்பில் அதிகளவு சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டு, பொலீஸாரும் படையினரும் கூட்டாகச் சோதனை நடத்தி மக்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள்.

கிழக்கு மாகாணம் மற்றும் வவுனியாவில் எப்போதும் இல்லாத அளவு முப்படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் —

அத்துடன் 25 க்கும் அதிகமான பொலீஸ் அதிபர்களும் உதவிப்பொலீஸ் அதிபர்களும் அங்குள்ள வெவ்வேறு பகுதிகளுக்குமென அனுப்பப்படுவதாகவும்—கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு நகரில் பொலீஸ் சோதனை நிலையங்களில் இராணுவத்தினர் நிலை கொண்டு சோதனைகளை மேற்கொள்வதாகவும்—

நகருக்கு வருவோரும், போவோரும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும் —

வழமையான சோதனை நிலையங்களுக்கு புறம்பாக கேந்திர ஸ்தானங்களில் திடீர் சோதனைகள் நடைபெறுவதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது

இதே வேளை—

கிழக்கு மாகாணத்தில் போட்டியிடும் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கு பாகுபாடின்றி சமமான அடிப்படையில் பாதுகாப்பு வழங்குமாறு கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் லக்கி அல்கம படையினருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

### முச்சந்தி முரளி



இச்சாலை வரப்பயந்து தான் அங்கேயே ஓட்டம் எடுத்திருப்பார் போலை...!

# சேதமடைந்த பகுதிகளை ஆண்டகை பார்வையிட்டார்

விமானக் குண்டு வீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களால் சேதமடைந்த பகுதிகளை இலங்கை கத்தோலிக்க திருச்சபை அதிமேற்றிராணியார் அதி வண. மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை நேற்றுப் பார்வையிட்டார்.

ஆண்டகையுடன் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்தடைந்த திருமலை - மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, துறவற சபைத் தலைவர் வண. பிதா அலெக்சாண்டர் ஆகியோரும் குண்டு வீச்சால் சேதமடைந்த யாகப்பர் ஆலயம், யாழ். செயலகம் ஆகியவற்றையும் சேதத்துக்குள்ளான ஏனைய பகுதிகளையும் பார்வையிட்டனர்.

இதேவேளை—

இன்று காலை6.30 மணிக்கு யாழ். ஆசனக் கோவிலில் நடைபெறும் விசேட பூசையில் இவர்கள் பங்கேற்பார்கள் அதன்பின் யாழ். மறைவட்ட பங்கு தந்தைகளையும், குருமார்களையும் அதிமேற்றிராணியார் சந்திப்பார்.

இக்குழுவினர் நாளை கொழும்பு திரும்புவர்.

(த-3-173)

# தேசியப்பட்டியல் மூலம் சந்திரிகாவுக்கு எம்.பி. பதவி?

கொழும்பு, ஜன. 27

திரு.ரி. டபிள்யு. ராஜரத்னம் காலமானதைத் தொடர்ந்து காலியான சுதந்திரக்கட்சியின் தேசியபட்டியலில் எம் பி பதவிக்கு திருமதி சந்திரிகா குமாரணதுங்கா அல்லது அல்ஹாஜ் அலவி மௌலானாவை சுதந்திரக் கட்சி நியமனம் செய்யக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகச் செல்லப்படுகிறது.

மேல்மாகாண முதலமைச்சராக இருக்கும் சந்திரிகா குமாரணதுங்காவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவது தெரிந்ததே

இந்த நிலையில் சந்திரிகாவை தேசியப்பட்டியல் மூலம் எம். பியாக்க சுதந்திரக் கட்சித் தலைமைப் பீடத்தின் ஒரு பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

இதே வேளை—

சுதந்திரக் கட்சியில் உள்ள தொழிற்சங்கவாதியான அலவி மௌலானாவை எம். பியாக்க இன்னும் சிலர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

# இராஜதுரைக்கு மீண்டும் ஐ. தே.கவில் எம். பீ. பதவி?

கொழும்பு, ஜன. 27

ஐ.தே. கவில் இணைந்து கொண்ட காமினி திசநாயக்க மற்றும் அவரது ஆதரவாளரான சரத் அமுனுகம ஆகியோரைத் தேசியப்பட்டியல் மூலம் எம். பியாக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதே வேளை—

கொழும்பு மாவட்ட எம். பி பதவிக்கு முன்னாள் அமைச்சர் செல்லையா இராஜதுரையும் நியமிக்கப்படவிருப்பதாக சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இவர்களுக்கு இடமளிப்பதற்காக தேசியப் பட்டியல் மூலம் கொழும்பு மாவட்டத்திலிருந்தும் எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சில ஐ.தே. கவினர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்யவிருக்கிறார்கள்.

மலேசியாவில் இலங்கை தூதராகப் பணிபுரியும் திரு. இராஜதுரை ஒரு சில வாரங்களில் இலங்கை திரும்புவார் என்றும்—

இராஜினாமாச் செய்யும் எம். பிக்களில் ஒருவர் அவரது இடத்துக்கு அதுவராக நியமிக்கப்படுவர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

அண்மையில் ஓய்வு பெற்ற விமானப்படைத் தளபதி ரெரன்ஸ் குணவர்த்தனா மலேசியா தூதராக நியமிக்கப்படலாம் என மற்றொரு செய்தி தெரிவித்தது.

(உ-3-9)

# கொழும்பு துறைமுகத்தில் 16 தமிழர்கள் கைதாகினர்?

கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த கப்பல் ஒன்றில் இருந்த 16 தமிழர்களை படையினர் கைது செய்துள்ளதாக கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

வெளிநாடுகளில் செய்தி தகவல் நிலையங்களை நிறுவி, விடுதலைப் புலிகளுக்கு தகவல் கொடுத்ததாகவும் —

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை கடத்தியதாகவும்—

சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3-6)

### குடியரசு தின விழாவில்

# ஜெயலலிதா - ரெட்டி ஒரே மேடையில்!

சென்னை, ஜன. 27

பல்வேறு ஊகங்களை எல்லாம் பொய்யாக்கி விட்டு, தமிழகத்தில் நேற்று நடைபெற்ற இந்திய குடியரசு தின விழாவில் மாநில ஆளுநர் சென்னாரெட்டியும் முதலமைச்சர் ஜெயலலிதாவும் ஒன்றாகக் கலந்து கொண்டனர்.

சென்னை மெரீனாக் கடற்கரையில், காந்தி சிலை அருகில் மாநில ஆளுநர் தேசியக் கொடியை ஏற்றி முப்படைகளின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார்.

அதற்கு முன்பதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நிகழ்ச்சி மேடைக்கு வந்திருந்து ஆளுநரை முறைப்படி வரவேற்றார்.

ஆளுநரும் முதலமைச்சரும் கூட்டாக மேடையில் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர் பின்னர் ஆளுநரை முதலமைச்சர் முறைப்படி வழியனுப்பி வைத்தார்.

இதேவேளை —

குடியரசு தினம் தொடர்பாக திரு. சென்னா ரெட்டி விடுத்த வானொலி செய்தியில் விடுதலைப் புலிகள் குறித்து தமிழக மக்கள் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் —

தீவிரவாதிகளினால் ஏற்படவிருக்கும் நிலைமைகளை சமாளிக்கவும், தடுக்கவும் [illegible] மக்கள் [illegible] என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (த-எ)

### அமெரிக்காவில் திருட்டுக் குற்றத்தில் சிக்கிய பின்னர்

# தலைமறைவான அதிகாரி லெப். கேணல் கொத்தலாவல!

## பயிற்சியின் பின்பு வடக்கிற்கு அனுப்பப்படவிருந்தாராம்

அமெரிக்காவில் இராணுவப் பயிற்சி பெற்று வந்த சமயம் தலைமறைவானதாக அறிவிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரி லெப்டினன்ட் கேணல் கொத்தலாவல என்று அடையாளங் காணப்பட்டுள்ளார்.

இவரின் எட்டு மாத காலப் பயிற்சி எதிர்வரும் பெப்ரவரி மாதம் முடிவடைவதாக இருந்தது.

அதன் பின்னர் அவர் வட பகுதி போர்முனையில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் பணியாற்றுவதற்காக அனுப்பி வைக்கப்படவிருந்தார்.

அமெரிக்காவின் சர்வதேச இராணுவ உதவித் திட்டத்தின் கீழ் அமெரிக்கா - ஜோர்ஜியா மாநிலத்தில் உள்ள பெனிங்கோட்டை இராணுவ அக்கடமியில் உயர்தர காலாட்படை அதிகாரிகள் பயிற்சி நெறியை தொடர அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பயிற்சி காலத்தின் போது இராணுவ வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து பொருள்களைத் திருடியது தொடர்பாக இவர் பிடிபட்டார். முதல் தடவை குற்றம் புரிந்தபோது இவர் அமெரிக்க அதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டார்.

இரண்டாவது தடவை அதே குற்றத்தைப் புரிந்த போது, இராணுவ அக்கடமியில் இருந்து இவர் வெளியேற்றப்பட்டார்.

இவரை, இலங்கைக்கு அனுப்பி வைக்க அமெரிக்க அதிகாரிகள் [illegible] எடுத்த போது இவர் [illegible] மறைவாகி விட்டார் என்று

(3ஆம் பக்கம் பார்க்க)

# டி. பி. முன்னிலையில் காமினி நேற்று ஐ.தே.கவில் சேர்ந்தார்

கொழும்பு, ஜன. 27

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்கா நேற்றுக் காலை ஜனாதிபதி இல்லத்தில், ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க முன்னிலையில் ஐ.தே. கவில் சேர்ந்தார்.

கட்சியில் சேர்வதற்கான தமது விண்ணப்பத்தையும் அங்கத்துவக் கட்டணத்தையும் ஜனாதிபதியிடம் அவர் கையளித்தார். ஜனாதிபதி ஐ. தே. க. அங்கத்துவ அட்டையை காமினிக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவோ அல்லது அமைச்சரும் ஐ.தே.க. பொதுச்செயலாளருமான சிறிசேன குரேயோ பங்கு பற்றவில்லை.

காமினி தரப்பில் —

வடமேல் மாகாண முதலமைச்சரும் ஜ. ஐ. தே. மு. பொதுச்செயலாளருமான ஜி. எம். பிரேமச்சந்திராவும் கலந்து கொள்ளவில்லை.

அரசின் தரப்பில் அமைச்சர் கே. என். சொக்ஸி மட்டுமே கலந்து கொண்டார்.

(உ-எ-க)

# ஐ.நா. அகதிகள் தூதரகத்தின் பணிகள் மீண்டும் வடக்கில்!

## புலிகளுடனான நேற்றைய பேச்சின் பின்னர் முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 27

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து—

வடக்கில் தமது நிவாரணம் மற்றும் வேலைத் திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்றைய பேச்சுக்களில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் கொழும்பு பாதுகாப்பு அதிகாரி கலாநிதி பீற்றர் நீக்கலஸ், யாழ் வதிவிடப் பிரதிநிதி திரு. அசோக்குமார் ஆகியோரும்—

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் கலந்து கொண்டனர்.

நேற்று முற்பகல் 10மணிக்கு ஆரம்பமான பேச்சுக்கள் சுமார் 3 மணி நேரம் இடம் பெற்றன

மடுவில் உள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணப் பணிகள், புனர்வாழ்வு வேலைத் திட்டங்கள், வெளிநாடுகளில் இருந்து வரும் அகதிகளின் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் நேற்றைய பேச்சின்போது இடம் பெற்றன.

மடுவில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு அரசு வழங்கிவரும் நிவாரண உணவுப் பொருள்களை தொடர்ந்தும் அரச அதிபரே மேற்கொள்வார். அவற்றினை மடுவிற்கு எடுத்துச் செல்லும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு கிழக்கு நிலவரம் குறித்து

# லண்டனில் உள்ள தமிழ்குழுக்கள் பிரிட்டிஷ் எம்.பிக்களுடன் பேச்சு

லண்டனில் உள்ள தமிழ்க் குழுக்கள் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து இலங்கையின் வடக்கு கிழக்கு நிலைவரம் குறித்து விளக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது'

விளக்கமளிப்பதற்காக விசேட கருத்தரங்கு ஒன்றுக்கு பிரிட்டிஷ் எம் பிக்களை அழைக்க இத்தமிழ்க் குழுக்கள் திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது வரை 40 பிரிட்டிஷ் எம். பிக்களுக்கு இதற்கான அழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் உள்ள இத் தமிழ்க் குழுக்களின் இந்த நடவடிக்கைகளை லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும்—

இது குறித்து பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சுடன் இலங்கைத் தூதரகம் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

வெஸ்ட்மினிஸ்டரில் உள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து இக் கருத்தரங்கை தமிழ்க் குழுக்கள் நடத்தவிருப்பது கொழும்பு வெளியுறவு அமைச்சு வட்டாரங்களில் கவலையை ஏற்படுத்தி உள்ளதாம்.

இது ஈழம் ஆதரவு தமிழ்க் குழுக்களுக்கு தேவையற்ற பிரபலத்தையும் சட்டபூர்வ அந்தஸ்தையும் கொடுக்கும் என்று அவ்வட்டாரங்கள் கவலைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (த-எ)

# இரு தரப்பாரும் மனம் வைத்தால் நாட்டில் சமாதானம் உருவாகும்

## யாழ். வந்துள்ள அதி மேற்றிராணியார் நம்பிக்கை

வடமராட்சி, ஜன. 27

சிங்களவர், தமிழர் ஆகிய இரு தரப்பினரும் நம்பிக்கையுடன் செயற்பட்டால் நாட்டில் சமாதானமும் அமைதியும் ஏற்படும். இரு தரப்பாரும் மனம் வைத்தால் சமாதானம் உண்டாகும் அந்த நம்பிக்கை எமக்கு உண்டு.

இவ்வாறு இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் அதிமேற்றிராணியார் அதி. வண நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை பருத்தித்துறை துறைமுகத்தில் செய்தியாளர்களுடன் கலந்துரையாடுகையில்தெரிவித்தார்.

அதி. மேற்றிராணியார் மார்க்கஸ் பெர்னாண்டோ, மட்டக்களப்பு - திருமலை மாவட்ட ஆயர் அதி வண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை' இலங்கை துறவற சபைத் தலைவர் வண. பிதா அலெக்சாண்டர் ஆகியோர் பருத்தித்துறை துறைமுகத்தை நேற்றுக் காலை வாதுவ கப்பல் மூலம் வந்தடைந்தனர்.

இவர்களை யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்திரு ஜெபநேசன் அடிகளார் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு ?. எம். இமானுவேல் ஆகியோர் முதலில் வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து பொது மக்களும் அவர்களை வரவேற்றனர். அங்கு குழுமி நின்ற பொதுமக்களுக்கு அதி மேற்றிராணியார் ஆசி வழங்கினார்.

துறைமுக வாசலில் வைத்து செய்தியாளர்களுடன் கலந்துரையாடுகையில் அதி மேற்றிராணியார் அதி வண நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை மேலும் கூறியதாவது: —

நாங்கள் சமாதானத்தைத் தேடித்தான் இங்கு வந்தோம் அங்குள்ள (தென் பகுதி) மக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# மிதிவெடியில் காலை இழந்து 3 நாட்கள் அலைந்த இளைஞர்

## கல்முனைக் கரையில் அவருக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவம்

யாழ்ப்பாணம், ஜன. 27

என்னைப் போலவே ஒருவர் படையினருக்கு அஞ்சி படுத்திருக்கிறார் என எண்ணி, அவரை எழுப்பும் நோக்குடன் அவர் தலைமயிரைப் பிடித்து உலுப்பினேன். தலைத் தோற்படையுடன் சேர்த்துப் பிடித்த மயிர் கையுடன் வந்ததைப் பார்த்து அதிர்ந்த நான் அப்படியே மயக்கமானேன்.

இவ்வாறு கூறினார் கல்முனைக் கடற்பிராந்தியத்தில் மிதிவெடியில் காலை இழந்த மீனவ இளைஞரான அல் போன்ஸ் அன்ரன் (வயது 18)

கல்முனைக் கடற்பிராந்தியத்தில் கடந்த திங்களன்று மீன் பிடிக்கச் சென்று, கடற்படையினரிடம் இருந்து தப்பி ஓடுகையில் மிதிவெடியில் சிக்கி ஒரு காலை இழந்த நிலையில் — மூன்று நாட்களின் பின்னர் — நேற்று முன்னிரவில் அவர் மீட்கப்பட்டார்.

கால் துண்டிக்கப்பட்ட நிலையில் மூன்று நாட்கள் உணவு, நீர் ஏதுமின்றி அலைந்து, இரத்தம் அதிகம் வெளியேறிய நிலையில் நேற்று அவர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டார். அவர் மேலும் கூறியதாவது -

மீன் பிடிக்கச் சென்ற நாம் படையினரிடம் சிக்கும் அபாயம் ஏற்பட்டதால் கல்முனைக் கரையிலேறி தப்பி ஓடினோம் எம்மைத் தொடர்ந்து வந்த ஷெல், துப்பாக்கிக் குண்டுகளுக்கு அஞ்சி நாங்கள் 15 பேர் சிதறி ஓடினோம்.

நீண்ட தூரம் ஓடி பெரிய வேலிப் பகுதியை நாம் அடைந்த போது மிதிவெடியில் சிக்குண்டேன். இடது கால் பாதத்துடன் சிதறிய

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் வண். வட கிழக்கு

# கொண்டலடி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக சிறப்புமலர்

27 - 01 - 1994

## பக்தகோடிகளின் தியானத்துக்கு அமைய எழுந்தருளிய கொண்டலடி விநாயகர்

ஸ்ரீவிராட் புருடனது இடை நாடி ஸ்தானமென்று சாந்தோக்கிய உபநிடதத்திலும், சுவர்ணபூமி புண்ணியபூமி எனத் தெக்ஷிண கைலாய மாஹ்மியத்திலும், சிவபூமி என திருமூலநாயனாராலும், அனுக்கிரகஸ்தலம் என்று மாணிக்கவாசகப் பெருமானாலும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராலும், சுந்தரமூர்த்தி நாயனாராலும் தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்றதும்; அருணகிரிநாதர் முதலிய பெரியோர்களால் திருப்புகழ் முதலிய அருட்பாக்கள் பாடப்பெற்றதுமான பல ஸ்தலங்களை தன்னகத்துட் கொண்ட இவ்விலங்காத் தீபத்தின் வடபால் யாழ்ப்பாணம் வண்ணையம்பதி — கொண்டலடி என்னும் ஸ்தலத்தில் பக்தகோடிகளின் தியானத்திற்கு அமையத் திருவுருவம் கொண்டெழுந்தருளி வீற்றிருக்கும் அருள்மிகு ஸ்ரீகொண்டலடி விநாயகப் பெருமானது ஆலயத்தை சிறிது புதுப்பித்து ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் ஸ்ரீமுக வருஷம் தைத்திங்கள் 14ஆம் நாள் இன்று (27-01-94) வியாழக்கிழமை பூரணை திதியும், பூச நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுப தினத்தன்று உதயாதி 8.08 இன் மேல் 9.14 இற்குள் வரும் கும்ப லக்கின சுப முகூர்த்த வேளையில் அருள்மிகு ஸ்ரீகொண்டலடிவிநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் ஜீர்ணோர்த்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் செய்ய திருவருள் பாலித்திருக்கிறது.

வண் வடகிழக்கு கஸ்தூரியார் வீதியில் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில் தான் தோன்றியாக உருவான வர், கொண்டலடி விநாயகர் எனும் திருநாமத்தைப் பெற்று பக்த கோடிகளுக்கு அருள் பாலித்த வண்ணம் இருக்கின்றார்.

ஆலயத் தல விருட்சமான கொண்டல் மரத்தில் தன் திருவுருவம் பதித்து வீதி வழி நோக்கி விக்கினங்கள் தீர்த்து, வேண்டுவன அளித்துக்கொண்டும்—

ஆலயத்தில் கிழக்கு முகம் நோக்கியும், பரிவார மூர்த்திகளான வைரவப் பெருமான் சந்தான கோபாலர், நாகதம்பிரான், சண்டேஸ்வரரோடும் வசந்த மண்டபத்தில் எழுந்தருளியும் இருக்கின்றார்.

தொன்மை மிக்க இவ் ஆலயத்தில் மாதாந்த சதுர்த்தி, மாத விஷேட அபிஷேகங்கள், சிவராத்திரி, நவராத்திரி, திருக்கார்த்திகை, அலங்காரத் திருவிழாக்கள் முதலியவை விஷேடமாக நடைபெற்றுவருகின்றன.

சைவ சமயத்தில் முதல் வழிபாடு விநாயகருக்கே. முதல்வரம் கொடுப்பவரும் அவரே. அந்தவகையில் அவரைத் தொழாது எடுக்கும் எக்காரியமும் கைகூடாது என்பது சான்றோர் வாக்கு. ஆனால் கொண்டலடி விநாயகனோ காரியத்தில் இறங்கிவிட்டு முடியும் தறுவாயில் கூட எம்பிழை அறிந்து மும்முறை நெற்றியில் குட்டி அவரை வணங்கும் போது பெருமனத்துடன் பொறுத்து வெற்றியளித்திடுவார்.

ஆலயத்தல விருட்சமான, கொண்டலில் துதிக்கை அகன்ற காதுகளுடனும் ஆனைமுகத்தே உருவான எம் பெருமானின் பெருமை சொல்லில் அடங்காது. அடியார்கள் வியக்கும் வகையில் விளங்கும்அவரை வணங்கிதம் குறைபோக்க வேண்டுவதைக் கண்கூடாக காண்கின்றோம். இவ் அதிசய அருளை வேறெங்கும் காண்பது அரிது.

இந்த ஆலயத்தை சிறப்புற அயல்வாழ் விநாயக அடியார்கள் பரிபாலித்து சிறப்புற எப்பெருமானின் எல்லா விழாக்களையும் நடத்தி வருகின்றனர்.

''வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்''

— ஆலய பரிபாலன சபை

★

## சௌபாக்கியம் வந்தணைக

சைவ அருட் பெருந்தகையீர்!

கொண்டலடி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் நிகழ விருப்பதறிந்து பேருவகை எய்துகிறோம். பிரணவ சொரூபியான விநாயகப்பெருமானுக்கு ஆற்றும் விழாக்கள், கைங்கரியங்களெல்லாம் முதல் ஸ்தானம் வகிப்பன. அதுவும் சாதாரண விழாக்கள் போலல்லாது பன்னிரு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் இப்பெருவிழா காண்பது கோடி புண்ணியம்.

கருணாமூர்த்தியான கணபதியின் திருவடிகளை ஒருமையுடன் இறுகப்பற்றிக் கொண்டால், சகல சௌபாக்கியங்களும் வந்தணையும். இவ்விழா செவ்வனே நிறைவுறப் பங்குகொள்ளும் சிவாச்சாரியப் பெருமக்கள், தொண்டர்கள், ஸ்தபதிகள் எல்லோருக்கும் விநாயகப் பெருமானின் திருவருளை உளமார வேண்டி எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்
(நல்லை ஆதீன முதல்வர்)

## அருள் ஆசாரத்துடன் வாழ்க!

ஈழத்திருநாட்டில் யாழ்ப்பாண நகரில் வண் வடகிழக்கில் கொண்டலடிப்பிள்ளையார் என்னும் நாமத்தோடு விளங்கும் விநாயகப்பெருமானுக்கு தைப்பூசத்திருநாளாகிய இன்று [27-01-94] [குடமுழுக்கு] கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இக்கோயில் வழிபாட்டுக்குச் சிறப்புடன் கூடியது இவ்வூர் பெருமக்களின் உதவியினாலும் இவ்வாலய நிர்வாக சபையினரின் விடாமுயற்சியினாலும் திருப்பணிகள் மூலம் புதுப்பிக்கப்பெற்று புதுப்பொலிவுடன் விளங்குகிறது விநாயகப்பெருமான் இவ்வூர் மக்களுக்கும் நிர்வாக சபையினருக்கும் இளம் சிறுவர்களுக்கும் சகல சௌபாக்கியங்களும் கொடுத்து அருள்புரியவேண்டும் என்றும், மக்கள் அனைவரும் நல்ல ஆசாரத்துடனும் அருளுடனும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் எனறும் ஆசிகூறி வாழ்த்துகிறேன்.

பிரதிஷ்டா சிரோமணி
நா. ப. லசுப்பிரமணியக் குருக்கள்
ஆலயப் பிரதம குரு

## நிறைந்த செல்வமளிக்கும் மகாகணபதி

எல்லாம் வல்ல கொன்றலடி விநாயகரின் மகாகும்பாபிஷேக விழாவை இன்று அவன் அருளாலே அவன் தாள் வணங்கும் அடியார்களாகிய நாம் கண்ணாரக் கண்டு பெரும்பேறு பெற்றுய்யும் நற் பலனைப் பெற்றுள்ளோம். துதிப்போர்க்கு வல்வினை போக்கி துன்பம் நீக்கி நெஞ்சில் பதிப்போர்க்கு நிறைந்த செல்வத்தை தந்தருளும் மகாகணபதியின் குடமுழுக்குத் தினங்களில் எழுகின்ற மங்கல நிகழ்வின் திருவருள் அதிர்வு அலைகள் அட்டதிக்கும் பரவி அனுக்கிரகம் பாலிப்பதாகுக.

''முன்நின்று காக்கும் கணபதியே-உன் கடைக்
கண்ணருள் தந்தெமைக் காத்தருளே''


க. தவராசா,
அதிபர்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

## பெருமைபெறும் குடமுழுக்கு

தம்மை நண்ணிய நாரையூர் நம்பிக்குக் கலைஞானம் கற்றுக்கொடுத்தவர் விநாயகர். மறைக்கப்பட்ட திருமுறைகளை வெளிக்கொணர நம்பி மூலம் உதவியவர் விநாயகர். கொண்டலடி விநாயகர் குடமுழுக்கு ஆறுகின்றார். அவர் உடலம் குளிர எங்கள் கண்கள் பனித்து உள்ளம் குளிரப்போகிறது.

முன்னவன் முன்னின்றால் முடியாதது ஏதுமில்லை. எண்ணரிய சிறப்புடனே மங்கலமாம் நன்னாளில் பெருமை பெறும் குடமுழுக்கு இலங்கி ஓங்க அமைதியும் பிறக்கத் தான் போகிறது.

கலாநிதி க. கனகராசா. ஜே. பி,
D. M Sc., D. Litt
அதிபர்,
மில்க்வைற் நிறுவனம்.



விநாயகர் துதி

லம்போதரம் மஹாகாயம் கஜகர்ணம் கஜாநநம்
கும்பாபிஷேக சித்தியர்த்தம் த்யாயேத் கொண்டலடி விநாயகம்

மின்னுலவு அங்குசபாச லட்டுகத்தோடு
விளங்கு கரத்துடன் யாழ் - வண்ணை நகரிலோங்கி
மன்னுலவு கொன்றை நிழற் கோவிலில் வாழும்
விநாயகனை துதித்து வாழ் வோம்.

## இறைவனை அடையும் மார்க்கம் உணர்த்தும் அவதாரமே கணபதி

இந்து சமய நூல்கள் யாவும் இறைவணக்கத்துடன் ஆரம்பிப்பது மரபு. அதிலும் கணபதி தெய்வமே முதலின் வணக்கத்திற்கு அமைந்ததாகும். இந்து சமயத்து நூல்கள் மட்டுமல்லாமல் இந்து சமயத்தவர்களின் எவ்வித கிரியைகளாயினும் சரி கணபதி தெய்வத்தை ஆரம்பத்தில் வேண்டிக் கொள்வதும் பிரமாணமேயாம்.

தெய்வங்களுள் அனாதியானதும் முழுமுதற் கடவுளும் சிவபெருமானே என்று தந்துள்ள இந்து சமயம், கணபதி தெய்வத்தை முதலில் வேண்டிக் கொள்ள வற்புறுத்தியுள்ளதற்கு ஓர் தக்க காரணம் இருக்கவே செய்யும்.

மானிடப் பிறவிகளுக்கு மட்டும் ஆன்மீகப்பேறு அமைந்ததாகும். ஆன்மீகப் பேற்றுக்கு வழிகாட்டுவதே இந்து சமயத்தின் நோக்கமாகும். எனவே இந்துசமயக் கூற்றுக்களுடன் மானிட வாழ்க்கையின் இயல்புகளும் இசைந்து செயல்படுவதாக அமைவது நியாயமேயாம்.

மக்கள் வாழ்விற்கு அதிமுக்கியமானது சுவாசமேயாம். இச்சுவாசத்திற்கு ஆதாரமாக அமைந்துள்ளது காற்று. இக்காற்றானது மூக்கினால் சுவாசிக்கப்படுவதே ஆனாலும் மூக்கின் இரு துவாரங்களினாலும் ஒரேசமயத்தில் சமமாகச் சுவாசிக்கப்படுவதில்லை. சகல மக்களுக்கும் ஒவ்வொரு மூக்குத் துவார வழியாக இச்சுவாசம் மாறி மாறி இயங்குவதாகும். இந்த மாற்றம் ஐந்து நாழிகை எனப்படும். இரண்டு மணித்தியாலயத்திற்கு ஒரு முறை மாறி மாறி இயங்குவதாகும் இது இயல்பு. வலது மூக்குத் துவாரத்தினால் இயங்கும் சுவாசத்தைப் பிங்கலை என்றும் இடது மூக்குத் துவாரத்தினால் இயங்கும் சுவாசத்தை இடகலை என்றும் கொள்வர். இந்த மாற்றத்திற்கும் ஓர் முக்கிய காரணம் இருக்கவே செய்யும். சுவாசத்தினைக் கணக்கிட்டு உள்இழுக்கும் நிலைப்படுத்தியும் வெளித்தள்ளியும் அப்பியாசிப்பதே பிராணாயாமம் எனப்படும் இக்கணக்கிற்கும் பகுத்தறிவு வேண்டும். எனவே

வைத்திய கலாநிதி க. இராமசாமி (டீ ஐ எம் எஸ்) எழுதிய 'கணபதியே காப்பு'' என்ற நூலிலிருந்து இக்கட்டுரை மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

பகுத்தறிவைக் கொண்ட மானிடர் மட்டும்இப்பிராணாயாம அப்பியாசத்திற்கு அமைந்தவராவர்.

மக்களின் ஐம்புலன்களின் இயக்கங்களுள் சுவாசம் மட்டும் இவ்வைந்து பூதியங்களையும் கவர்ந்து இயங்க அமைந்துள்ளதாகும். அதாவது, சுவாசம் வலம் இடமாக மாறி மாறி இயங்கிய போதிலும் அவை தனித் தனி பிருதுவிமயம், அப்புமயம், தேயுமயம், வாயுமயம் ஆகாசமயம் என்ற ஐந்து பிரிவுகளாக நிரை கொண்டு இயங்குவனவாம். ஆகவே உலக இயக்கத்தின் பஞ்சபூதியத் தன்மைகளுக்கு சீவான் மக்களின் சுவாச இயக்கத்தின் தன்மைகளுக்கும் இயக்க ஒற்றுமை உண்டு என்பதை எவரும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

பஞ்சபூதியங்களுள் அனாதியானது ஆகாசபூதியம், ஆகாசபூதியம் நிர்மலமானது, பற்றற்றது. ஐம்புலன்களாலும் அனுபவிக்க முடியாதது. இத்தன்மைகளைக் கொண்டுள்ளவனே இறைவன்.

இறைவனை அடைவதே சகல மக்களின் கடைசி நோக்கமாகும். இறைவனை அடையும் மார்க்கத்தை அவ்விறைவனே அறிந்துளன். எனவே அம்மார்க்கத்தை உலக மக்களுக்கு உணர்த்த வேண்டியவனாகவும் அவ்விறைவனே அமைந்தனன். இதற்காக இறைவன் எடுத்துக்கொண்ட அவதாரமே கணபதி முகூர்த்தமாகும்.

பிராணனுக்கு ஆதாரமானது பிராணாவாயு எனும் காற்று. இக்காற்றினை ஆதாரமாகக் கொண்டு செய்யும் அப்பியாசம் பிராணாயாமம். பிராணாயாம அப்பியாசம் கைவல்யப்பட்ட இடத்து நாம் பெறுவது குண்டலி சக்தி. இக்குண்டலி சக்தியால் மூன்று கால நிகழ்ச்சிகளையும் தெளிவுற அறிவதுமல்லாமல் ஆன்மாவானது பிறப்பை ஒழித்து சமாதி நிலை எய்துவதற்கும் வழிவகுப்பதாகும். இச்சமாதி நிலையே இறைவனடி சேர்ப்பிப்பதாகும். சுவாச அப்பியாசம் என்னும் பிராணாயாமத்தின் போக்கினைப் புலப்படுத்த அமைந்ததுவே கணபதியின் அமைப்பாகும். எனவே ஆன்ம ஈடேற்றத்தில் ஈடுபாடு அடைய விரும்புவோர் இத்தொடர்புகளைத் தெட்டத்தெளிவாக உணர்ந்து அவ்வழியைப் பின்பற்றிக்கொள்ள வேண்டியதும் அவர்களின் தவறாத கடமையாகும். அன்றேல் ஆன்ம ஈடேற்றம் சாத்தியமாகாது என்பது சரியேயாம்.

★


சிறி அமலா நகை மாளிகை
தங்கப் பவுண் நகை வியாபாரம்
❊ பெண்மைக்கு மெருகேற்றும்
❊ இளமைக்கு எழிலூட்டும்
உன்னத கலை நயம்மிக்க நகைகளை உங்கள்
எழில் மிகு உடல் வாகுக்கேற்ப அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா தங்கப் பவுண் நகைகளை
செய்து பெற்றிட வாரீர்.
79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



விநாயகப் பெருமானின்
கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்

ஜெகன் போட்டோ
399, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
234/4A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக)

நியூ ஸ்ரான்லீஸ்
C I C பெயின்ற் விநியோகஸ்தர்களும்
விற்பனையாளர்களும்
95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சுபமாலா மோட்டோர்ஸ்
மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
விற்பனையாளர்
79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சாந்தாஸ் அழகு மாளிகை
CHANDAAS FANCY
அழகு சாதனப் பொருள்கள் விநியோகஸ்தர்களும்
விற்பனையாளர்களும்
65 (29), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சுப்பஸோ வீடியோ ஓடியோ சென்ரர்
சகல விதமான சினிமாப் படங்களுக்கும்
புதுமை புகுத்தி மங்கள நிகழ்வுகளை படமாக்கித்
தருபவர்களும்
198/5, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

புதுப்படங்கள் உடனே பெற்றுக் கொள்ள
திரு வீடியோ விஷன்
மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி

இந்திரா நகையகம்
தங்கப் பவுண் நகை வியாபாரிகள்
181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வீனஸ் தங்க மாளிகை
தங்க வைர நகை வியாபாரம்
★ நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

செல்லையா சிவபாதலிங்கம்
வைரக்கல் நகை வியாபாரம்
★ சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகளையும், சிங்கப்பூர் நகைகளையும் விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்.
191 H, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சோபனா நகை மாளிகை
பெண்மைக்கு மெருகூட்டும்
இளமைக்கு எழிலூட்டும்
தங்க நகைகளின் சுரங்கம்
116 V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

★ அழகுக்கு அழகு செய்யும் தங்க நகைக்கு
சிறி நதியா நகை மாளிகை
2 G, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

சகலவிதமான கடைச்சல் வேலைகளுக்கும்
மைக்றோ ஓட்டோ வேக்ஸ்
401, மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

சதாஸ் மோட்டோர்ஸ்
56/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

நவீன தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
கயல்விழி நகைப் பூங்கா
224 B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## மூன்றாவதில் மூன்றாவது!

யாழ்ப்பாணம் ஸ்ரீலங்காவில் மூன்றாவது உலகமாக உள்ளது!

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு. டொமினிக் டுபேர் இவ்வாறு வர்ணித்துள்ளார். அவரது வர்ணனை, மதிப்பீடு, ஒப்பீடு, உவமை யாவும் பொருத்தமானவையே.

உலகில் மூன்றாம் உலக நாடாக விளங்கும் ஸ்ரீலங்காவுக்குள்ளேயே, யாழ்ப்பாணம் மூன்றாது உலகமாக இருக்கிறது என்றால் யாழ்ப்பாணம் எந்தளவுக்குப் பின்னடைந்து உள்ளது என்பது இலகுவாகப் புரிந்துவிடும். அவருடைய அளவுமானி சரியாகவே வேலை செய்திருக்கிறது.

உலகின் ஏனைய நாடுகள், பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது, யாழ்ப்பாணம் 300 அல்லது 400 வருடங்கள் பின்னடைந்துள்ளது என்பதனை திரு. டுபேரினால் மட்டுமன்றி இங்கு வந்து இரு தினங்கள் தங்கியிருக்கும் எவராலும் இலகுவில் கண்டறிய முடியும்.

உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகள் எல்லாம் உயர் தொழில்நுட்பத்தின் (High Technology) விளைவுகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் யாழ்ப்பாணத்து மக்களோ தங்கள் நாளாந்த வாழ்க்கைக்குரிய அத்தியாவசிய — அடிப்படை — தேவைகளைக் கூடப் பெறமுடியாத நிலையில் அவலப்படுகின்றனர்.

உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்று பிரதான மனித வாழ்க்கைத் தேவைகள் உட்பட சுகாதாரம், போக்குவரத்து, கல்வி, பொருளாதாரம், உற்பத்தி, கைத்தொழில், விவசாயம் என்று எல்லாத் துறைகளிலுமே யாழ்ப்பாணம் பின்னடைந்து நிற்கிறது.

யாழ்ப்பாணத்து மக்கள் கடும் உழைப்பாளிகள் என்றும் புத்திக்கூர்மையும், பெரு விவேகமும் உடையவர்கள் என்றும் பெயரெடுத்தவர்கள். பொருளாதாரம் உட்படப் பல துறைகளிலும் ஸ்ரீலங்கா நாட்டின் ஏனைய பிரதேசங்களை விட முன்னணி வகித்தது யாழ்ப்பாணம். தலைநகர் கொழும்புக்கு அடுத்து கண்டியுடன் போட்டி போட்டுக் கொண்டு முன்னேற்றம் அடைந்திருந்தது அது. அந்த நிலையைக்கண்டு ஐம்பதுகளிலேயே சிங்களத் தலைவர்கள் பொறாமைப் பட்டார்கள்.

சகல சிங்களத் தலைவர்களும் உத்தியோகத்தர்களும் அப்போதிருந்தே கூட்டு முயற்சி செய்து யாழ்ப்பாணத்தை எல்லா வகைகளாலும் வீழ்த்தி அதனைப் பின் தள்ள முயன்றனர்.

கடந்த பத்து ஆண்டுகளில், குறிப்பாக யுத்தம் தொடங்கிய மூன்றரை வருடங்களில் யாழ்ப்பாணத்தையும், இங்கு வாழும் மக்களையும் முற்றாக அழித்து விடுவது என்ற இலக்குடனேயே கொழும்பு அரசு செயற்படுகிறது! இங்கு வாழ்பவர்கள் தமிழர்கள் என்பதால், அவர்கள் மனிதர்கள் அல்லர் என்ற நிலைப்பாட்டைக் கைக்கொண்டது போலவே, அதன் அட்டூழியங்களும், அக்கிரமங்களும் அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தையும், யாழ்ப்பாணத்தவரையும் அழிக்கக் கங்கணங்கட்டி நிற்கும் அரசுக்கு அது பின்னடைவதைப் பற்றி ஏது அக்கறை? ஆனால் யாழ்ப்பாணத்தவர்கள் தனது பிரசைகள் என்று இன்னமும் கூறிக் கொள்கிறது. அது மட்டுமா? தமிழர்கள் சகல உரிமைகளுடனும் வசதியுடனும் வாழ்கிறார்கள் என்று உலக நாடுகளில் தனது பொய்ப் பிரசாரத்தையும் மிகத் தீவிரமாக முடுக்கிவிட்டுள்ளது. இந்த முரண்பட்ட நிலை நீக்கப்பட வேண்டுமானால் திரு. டுபேரின் பக்கச்சார்பில்லா மதிப்பீடு உலகம் முழுவதற்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும். ஸ்ரீலங்கா அரசு அழிக்க நினைக்கும் தமிழர்கள் தமக்கென ஒரு நாட்டையும், ஓர் அரசையும் அமைத்து வாழ உதவ வேண்டும்.

## ஆலயங்களில்

தாவடி அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலயத்திலும், ஆனைக்கோட்டை கூளாவடி புற்கைதின்னி விநாயகர் ஆலயத்திலும் மகாகும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறும். [க-17 30]

## இன்று

மேலைப் புலோலியூர் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் பௌர்ணமி கலை விழா இன்று மாலை 6 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறும். (த-30)

★ ★ ★

சந்நிதிமடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்தமட பரிபாலன சபை ஏற்பாடு செய்துள்ள மாதாந்த சொற்பொழிவு இன்று பிற்பகல் 3 30 மணிக்கு மேற்படி வேதாந்த மடத்தில் நடைபெறும்.

''திருமுறையே பெருமறை'' என்ற பொருளில் சைவப் புலவர் பொன். தெய்வேந்திரன் சொற்பொழிவாற்றுவார். (த)

★ ★ ★

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்தினால் விவசாய சேவை விற்பனை நிலையம் ஒன்று இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ். பிரதான வீதியில் உள்ள சமாச அலுவலகத்தில் திறந்து வைக்கப்படும். (த-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 26

மெய்கண்ட தேவர் ஆதீனத்தின் குருமணி ஆதீனத் தொண்டு செய் முதல்வர் சீருடையும் சிறப்புப் பெயரும் சிவாசாரியகுருவிடம் பெறுதல் இன்று வியாழக்கிழமை காலை மாணிக்கப் பிள்ளையார் கோயிலில் நிகழும். காலை 9 மணிக்கு கஸ்தூரியார் வீதி 480 ஆம் இலக்க இல்லத்தில் சி. வ. ஞானச் செயலகம் ஆரம்பமாகும். (க)

★ ★ ★

வட்டுக்கோட்டை, ஜன. 26

பேராயர் குலேந்திரன் நினைவு மண்டபம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புப் பகுதியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பேராயர் கலாநிதி எஸ். ஜெயநேசன் அவர்களால் திறந்து வைக்கப்படும். (க-161)

★ ★ ★

வலிகாமம் தெற்கு பிரதேச சபையும் அதன் சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் முழுநிலா அறிவியற் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சுன்னாகம் பெரிய மதவடி பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் சாந்தியம் பணிப்பாளர் திரு பி. ஏ. சி ஆனந்தராசா ''ஆளுமை வளர்ச்சி'' எனும் விடயம் பற்றி அறிவுரை வழங்குவார். (க-30)

★ ★ ★

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் இவ்வாண்டுக்கான செயலமர்வு இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறும். [க]

★ ★ ★

யாழ். கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று பிற்பகல் 4 மணியளவில் பூரணைக் கருத்தரங்கு நடைபெறும்.

'வாழ்வில் சமயம்' என்ற விடயம் பற்றி கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் உரையாற்றுவார். நிலையத் தலைவர் கா. கணேசதாசன் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குவார். [க-30]

★ ★ ★

அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்தின் 45ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று வியாழக்கிழமை நடைபெறும். (க-17)

★ ★ ★

இன்று தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைக் கூட்டம் காலை 10 மணிக்கு நடைபெறும்.

## பாலகிட்ணர் ஓய்வு பெற்றார்

கொழும்பு, ஜன. 27

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக கடமையாற்றிய நீதியரசர் கே. பாலகிட்ணர் ஓய்வு பெற்றுள்ளார். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய தலைவராக நீதியரசர் சரத் சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

எல். எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ் றோட்டராக்ட் கழகம் நடத்தும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகளில் இன்று காலை 9 மணி முதல் 5.30 மணி வரை சுண்டிக்குளி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் மேசைப் பந்தாட்டம் இடம் பெறும். (த)

★ ★ ★

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று பி ப 3 மணிக்கு வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் வி. க. அணியை எதிர்த்து ஊரெழு றோயல் வி. க. அணி மோதும். (த)

★ ★ ★

விக்ரம், ராஜன் நினைவாக கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்து மைதானத்தில் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ காலை 8.30 மணி:- ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. எதிர் கொக்குவில் ம. ச. ச. நிலைய வி. க.

★ பி. ப. 1.30 மணி:- ஷபறா வி. க. எதிர் யாழ். பல்கலைக்கழகம்.

## இன்று தைப்பூசம்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள முருகன் ஆலயங்களில் இன்று தைப்பூசத் திருவிழா வெகு சிறப்பாக நடைபெறும். ஏனைய ஆலயங்களிலும் புதிர் எடுத்துப் பொங்கல் நடைபெறும். சுமங்கலி பூசை, திருவிளக்குப் பூசை என்பனவும் சிறப்பாக நடைபெறும்.

புதிர் எடுத்தல், புதுக் கணக்கு வைத்தல், ஏடு தொடக்குதல் போன்ற சுப காரியங்களும் இன்று இடம் பெறும்.

நல்லூரில் இன்று முருகப் பெருமான் மஞ்சத்தில் வீதி வலம் வருவார். தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலும் விசேட திருவிழா நடைபெறும். (அ-28-17)

---

தலைமறைவான---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க அதிகாரிகள் இலங்கை இராணுவ தலைமையகத்துக்கு அறிவித்துள்ளனர்.

எத்தனையோ தகுதியுள்ள அதிகாரிகள் இருந்தும் அவர்களைப் புறக்கணித்து விட்டு உயர்தர இராணுவப் பயிற்சிக்காக இவர் அமெரிக்காவுக்கு முந்திய இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்தினவால் அனுப்பி வைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் பயிற்சிக்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட சமயம் இவருக்கு எதிராக பல ஒழுங்காற்று விசாரணைகள் நடத்தப்பட்டு வந்ததாகவும்—

அவற்றில் ஒன்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தரவின் மீது நடத்தப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வளவுக்கு மத்தியிலும் எப்படி இவர் அமெரிக்காவில் உயர் பயிற்சி பெற தெரிவு செய்யப்பட்டார் என்பதைக் கண்டறிய பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் —

லெப்டினன்ட் கேணல் கொத்தலாவலயின் நடத்தை குறித்து திணைக்கள விசாரணை நடத்தப்படும் என்று இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

தலைமறைவான கொத்தலாவலயைக் கண்டு பிடித்து இலங்கைக்கு நாடு கடத்தும் நடவடிக்கையில் எவ். பி. ஐ. அமைப்பின் உதவியுடன் அமெரிக்க குடியகல்வு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட லெப்டினன்ட் கேணல் கொத்தலாவல 1987 இற்கு முன்னர் கப்டன் தரத்தில் யாழ் கோட்டை முகாமில் கடமையாற்றியவர் என்பது தெரிந்ததே. (உ-எ-3)

# போரில் இரத்தம் சிந்த 30 ஆயிரம் பிக்குகள் தயார்!

## பௌத்த தேரர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜன. 27

''பிரபாகரனுக்கு எதிரான போரில் 30 ஆயிரம் பௌத்த பிக்குகள் இரத்தம் சிந்த தயாராக உள்ளனர்.''

பௌத்த தேசாபிமான பிக்கு முன்னணியைச் சேர்ந்த பெல்கமுவ ஞானநந்த தேரர் 'சிலுமின' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்கிய பின்னரே அவர்களுடன் பேச்சு நடத்த வேண்டும். அந்நிய நாட்டவரின் சமாதான முயற்சிகள் நிராகரிக்கப்பட வேண்டும்.

சிங்களவர்களின் தாய் நாட்டில் தமிழீழம் அமைக்க பிரபாகரன் முனைகிறார். ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் கரங்களைப் பலப்படுத்தி யுத்த முனைக்குச் செல்ல மக்களைத் தயார்ப்படுத்த வேண்டும். பௌத்த தேசாபிமான பிக்கு முன்னணி இருக்கும் வரை விடுதலைப் புலிகள் தனி நாடு பெற முடியாது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட 18 வயதுக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் அனைவருக்கும் யுத்தப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

—இவ்வாறு அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## சுதந்திரப் பறவைகள்

யாழ்ப்பாணம், ஜன 26

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான ''சுதந்திரப் பறவைகள்'' தை மாத இதழ் இன்று வியாழக்கிழமை வெளிவருகிறது.

தமிழீழ காவல்துறை நிர்வாகத்தில் பெண்களின் பங்கு, ஆனை கட்டிய அரியாத்தை, கடற்புலிகளின் மகளிர் படையணி ஆகிய கட்டுரைகள் உட்பட பல அம்சங்கள் இவ்விதழில் வெளியாகின. (அ)

---

இரு தரப்பாரும்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். நம்பிக்கையுடன் செயற்பட்டால் சமாதானம் உருவாகும்.

இங்குள்ள மக்களின் கஷ்டங்கள், துன்பதுயரங்கள் குறித்து யாழ். ஆயரும் இங்குள்ள குருமார்களும், எமக்கு அடிக்கடி தகவல்கள் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இங்கு சேதமடைந்த பகுதிகளை நாம் பார்வையிடுவதுடன் பொது மக்களையும் சந்தித்து உரையாடுவோம்.

நேற்று முன்தினம் இளவாலைப் பகுதிக்கு விஜயம்செய்து அங்குள்ள மக்களைச் சந்தித்தோம். அங்குள்ள ஆலயத்தில் திருப்பலிப்பூஜை செய்தோம் அங்குள்ள மக்களும் இராணுவத்தினரும் கலந்து கொண்டனர். அங்கு மக்களுடன் இராணுவமும் இருக்கிறார்கள்.

அங்குள்ள 12 வயோதிபர்களையும் நேரில் சென்று பார்த்தோம் அவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு இங்குள்ள ஆயர், குருவானர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்கள்.

யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதல் எனக்கு பெரும் வேதனையைத் தருகிறது. இது குறித்து வத்திக்கானுக்கு அறிவிக்கப்பட்டது — இவ்வாறு அதி மேற்றிராணியார் தெரிவித்தார்.

செய்தியாளர் ஒருவரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அதி மேற்றிராணியார்-

அரசாங்கத்தின் சமாதானத் திட்டம் எதனையும் நாம் கொண்டுவரவில்லை. அரசிடம் சமாதானத் திட்டம் ஏதாவது உண்டா என்பது குறித்து அதனிடம் தான் கேட்க வேண்டும் — என்றார்.

மட்டக்களப்பு — திருமலை மாவட்ட ஆயர் அதி. வண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில் —

இங்குள்ள மக்கள் படும் துன்பதுயரங்களையும் அழிவுகளையும் நேரில் பார்க்கவே வந்துள்ளோம் — என்றார். (அ-173)

## இளவரசர் சார்ள்ஸ் துப்பாக்கி சூட்டில் தப்பினார்!

சிட்னி, ஜன. 27

அவுஸ்திரேலியா — சிட்னி நகரில் பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒன்றில், அவர் மீது விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பிப்பதற்குப் பயன்படுத்தும் பிஸ்ரல் ஒன்றினால் நபர் ஒருவர் சுட்டார்.

இளவரசர் காயம் ஏதுமின்றி தப்பினார். சந்தேகத்தின் பேரில் ஆசிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். (த-எ-6)

---

மிதிவெடியில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தால் ஓட வழியின்றி நிலத்தில் இழுபட்டு அரக்கி, அரக்கி முன்னேறினேன்.

உதவிக்கு ஒருவருமின்றி பெரியவேலிப் பகுதியைத் தாண்டி காய்ஞ்சகாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்த போது நிலவு ஒளியில் வெள்ளை மணல் பாங்கான தரையில் யாரோ படுத்திருப்பது போலத் தெரிந்தது. உதவி கேட்பதற்காக அவரது தலைமயிரைப் பிடித்து எழுப்ப முயன்ற போது தலைமயிர் அப்படியே எனது கையுடன் வந்தது. அருகில் மற்றொருவரின் அரைகுறை உடலும் காணப்பட்டது.

அவை மனித பிரேதங்கள் என உணர்ந்ததும் எனது உடல் வியர்ந்து சிலிர்க்க நான் மயக்கமுற்றேன்.

அரைகுறையாக அழுகிக் கிடந்த சடலங்களுக்கு மத்தியில் நினைவின்றிக் கிடந்த நான், பின்னர் எழுந்து அவ்விடத்தை விட்டு அகலத் தொடங்கினேன்.

மூன்று நாட்கள் அரக்கி அரக்கி அலைந்த நான், ஓரளவு இடம் புரியத் தொடங்கியதும் நேற்று (புதன்)மாலை இருளத் தொடங்கியதும் கரையோரத்தை நோக்கி நகர்ந்தேன்.

அவ்வேளை — இரவு 7 மணியளவில் — என்னைத் தேடித் திரிந்த சகோதரனும் மற்றும் இருவரும் என்னைக் கண்டு என்னை தமது படகில் மீட்டு வந்தனர். — என்றார். (உ-15)

---

ஐ. நா. அகதிகள்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்களுக்கான பாதுகாப்பை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இனிமேல் வழங்கமாட்டாது எனினும் மடு இடம்பெயர்ந்தோர் முகாம் மக்களுக்கு சுகாதார சேவை, நீர்வசதி, தங்குமிட வசதி மற்றும் போக்குவரத்துப் பணிகளை அது மீண்டும் ஆரம்பிக்கும்— எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பணிகள் கடந்த சில மாதங்களாக இடைநிறுத்தப் பட்டிருந்தமை தெரிந்ததே. (உ-5)

எமது புதிய வெளியீடுகள்

பிரபுவின் 100 ஆவது படம்

பிரபு, நதியா நடித்த
* ராஜகுமாரன்.
சத்தியராஜ் (இரு வேடங்களில்),
ரஞ்சிதா நடித்த
* அமைதிப்படை,

சுப்பலோ வீடியோ ஓடியோ சென்ரர்.
198/5 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(7146)

தாவடி அருள்மிகு
ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய
மஹா கும்பாபிஷேகம்

27 - 01 - 94 வியாழன் (இன்று)
காலை 7 மணி:- தீபாராதனை
காலை 8.06: தூபிகளுக்கு அபிஷேகம்
முற்பகல் 9.22:- மஹா கும்பாபிஷேகம்

ஆசியுரை:-
கலாநிதி ப கோபாலகிருஸ்ணன் அவர்கள்
(யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை தலைவர்)

மாலை 5-30 — 6-30 மணி வரை பண்ணிசை
சங்கீத பூஷணம் பண்ணிசைவாளர்
திரு. வி. சிவஞானசேகரம் குழுவினர்

6-30 — 7-30 மணி வரை
விநாயப்பெருமான், சுப்பிரமணியர்
வள்ளி தெய்வயானை சமேதரராக வீதியுலா

7-30 — 8-00 மணி வரை
கும்பாபிஷேக நிறைவுரை
திருமுறை சீர் பரவுவார்
சிவ. மகாலிங்கம் அவர்கள்
(விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை)

எமது மண்ணுக்கும் எம் மக்களுக்கும் உள்ள இடர்கள், துன்ப துயரங்களைத் தீர்த்து அருள் புரிய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை இன்றைய தைப்பூசத் திருநாளில் வேண்டி நிற்கிறோம்.

திருப்பதி ரெக்ஸ்
33, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி-7144)

** திறப்பு விழா **

இன்று 27 — 01 — 1994 வியாழக்கிழமை
காலை 6-35 — 7-35 மணி வரை
வரும் சுபமுகூர்த்த வேளையில்,

ஸ்ரீ சரஸ்வதி பவான்
(சைவ உணவகம்)
195 (57). காங்கேசன்துறை வீதி.
பெரியகடை.

என்னும் ஸ்தாபனம் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படும் என்பதை நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

உரிமையாளர்:
மண்கும்பான் குணம்.
[29104]

திருமறைக் கலா மன்றம்
வழங்கும்
கலை நிலா அரங்கம்

28 - 01 - 1994 (வெள்ளி)
மாலை 6-45 மணி
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
மாதாந்தப் பாடல் - இசைக்கச்சேரி
நாடகப் பயிலகத்தின்
கி. பி. 2000 (நாடகம்)
ஆசனப் பதிவு உண்டு

ரவி அன் ராஜ் சில்க்ஸ்
ரகுமான் கட்டடம்,
77, பெரியகடை, யாழ்ப்பாணம்
(சி-7140)

VACANCY

PROJECT OFFICER
MANNAR MAIN LAND (MADHU)

The post holder will be responsible for the day to day implementation of SCF activities and monitoring of SCF funded projects.

MAIN REQUIREMENTS:

Proven experience in Relief & Rehabilitation work in Food security, Income generating activities, community health, women and children affected by the conflict. Also experience in project management is required.

Starting salary Rs. 4,673/- plus medical benefits.

The application should be sent to the following address:

SAVE THE CHILDREN FUND (UK)
"KARUVEMBAN VALAVU"
Rajaveethy, Thirunelvely.
Closing date: 11th Feb. 94
(C-7141)

அருமையான பொட்டாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## காணவில்லை

பிறவுண் நிற பொமனேரியன் நாய்க்குட்டி காணாமல் போய்விட்டது. கண்டவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். 15. செல். பீற்றர்ஸ் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். அடைக்கல மாதா கோவிலுக்கு சமீபமாக. (29123)

## விற்பனைக்கு

வாடகைக்கு விடப்படும் தரைப் பந்தல், கதிரைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: இலங்கேஸ்வரன், மயிலணி வடக்கு, சுன்னாகம். (29108)

## தேவை

வைத்தியசாலைக்கு பெண் தாதிமார் தேவை. பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம். 926, C/o உதயன், யாழ்ப்பாணம். (6924)

நல்ல நிலையில் உள்ள ஐந்து பக்கமும் கண்ணாடியாலான கடைப்பாவிப்புக்குரிய சோகேஸ் ஒன்று தேவை: உடன் தொடர்பு கொள்ளவும். 19, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (6925)

மெடிக்கல் Labக்கு நல்ல நிலையில் உள்ள Microscopeம் Hand Centrifugeம் தேவை. Make, எதிர்பார்க்கும் விலை, முதலியவற்றுடன் எழுதவும். 925, C/o உதயன், யாழ்ப்பாணம். (6923)

## வாங்குகிறோம்

கல்தேக்கு (கத்தாப்பு) விதைகள் வாங்குகிறோம். மில்க்வைற். (சி-7127)

## கல்வனைட் தகடு

கல்வனைட் தகடுகள் 3x8 அளவில் விற்பனைக்குண்டு. ''மில்க்வைற்''. (சி-7128)

## மணிக்கூடுகள் திருத்தல்

சகல மணிக்கூடுகள் குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும், சகல மணிக்கட்டு பற்றறிகளும் எம்மிடம் உண்டு. கஜன்ஸ் வாச்வேக்ஸ், 12, ஸ்ரேசன் வீதி, (சந்திக்கு அருகாமையில்) சுன்னாகம். (6921)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப்பாருங்களேன்! தினமும் முற்பகல் 8-30 — 12-30 பிற்பகல் 3-00—6-00 த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (29096)

## மணமகன் தேவை

இந்து மதம், பூரட்டாதி நட்சத்திரம் செவ்வாய்க்குற்ற மற்ற, படித்த, 24வயதுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை. தொடர்பு: G. V. Kanesalinkam, C/o Paramanatha, Uyarappulam, Anaikoddal. (29112)

## இலவச திருமண சேவை

38 வயது, U. K. Accountant, பூராடம், செவ்வாயற்ற. சிரகபாவம் 22 மணமகனுக்கு 30 வயதிற்குள் A/L வரையாவது தேர்ச்சி பெற்ற மணப்பெண் தேவை. திருமணம் செய்து அழைக்கலாம் விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (29079)

## சுகாதார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 27
காது, மூக்கு, தொண்டை நோய்கள் சம்பந்தமான கருத்தரங்கு இன்று வியாழன் காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய மத்திய மருந்தக மண்டபத்தில் நடைபெறும். (க-18)


படித்து விட்டீர்களா?

மாருதம்

சஞ்சிகை: 05

(29086)


---

வடமாகாண
புற்றுநோய்த் தடுப்புச் சங்கம்
நடத்தும்

# முடிவில் ஓர் ஆரம்பம்

(நாடகம்)

கதை, வசனம், நெறியாள்கை:
கலைமாறன், திரு S. யோகேந்திரா அவர்கள்.

இசை: அருணா

(இது பிற்போடப்பட்ட நாடகம்)

முன்பு விற்பனை செய்யப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள் செல்லுபடியாகும்.

காலம்: **28 — 01 — 1994** வெள்ளி பி.ப. 3-30 மணி
மாணவர்களுக்கான காட்சி
**29 — 01 — 1994** சனி பி. ப. 3-30 மணி
பெரியவர்களுக்கான காட்சி

இடம்: யாழ். இந்துக் கல்லூரி
குமாரசாமி மண்டபம்.

பிரவேசம்: மாணவர் ரூபா: **5 — 00**
பெரியோர் ரூபா: **10 — 00**

[29107]

---

கன்னாதிட்டி சனசமூக நிலையம்

# திறப்பு விழா

அன்புடையீர்!

யாழ். கன்னாதிட்டி சனசமூக நிலையம் இன்று (27 - 01 - 1994) வியாழக்கிழமை காலை 8-00 மணி முதல் 10 00 மணி வரை உள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படும். திறப்பு விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

- சன்னாதிட்டி சனசமூக நிலையம்.

[29119]

---

# முக்கிய அறிவித்தல்

இன்று **27 — 01 — 1994** மாலை 3 மணியளவில் வடபிராந்திய பொதி சுமக்கும் வாகனச் சங்க உரிமையாளர்களின் கலந்துரையாடல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

வடபிராந்திய பெதி சுமக்கும்
வாகனச் சங்கம்

(29116)

---

மானிப்பாய் இந்துவின்

# கண்ணீர் அஞ்சலிகள்

சேவைக்காலம்: **1948 - 1979**

எமது கல்லூரியில்
சிறந்த மாணவனாய்
ஆசிரியராய்
உப அதிபராய்
அதிபராய் விளங்கி
கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது நற்பணி புரிந்த
முன்னாள் அதிபர் அமரர்

## உயர்திரு. மு. பேராயிரவர்

B A., Dip. in Edu , C E S.

அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரது ஆன்மா சாந்திபெற பிரார்த்தனை செய்வதுடன், அவரது குடும்பத்தினருக்கு எங்கள் இதயம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
ஊழியர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.
27 - 01 - 1994

[சி-7139]

---

மானிப்பாய் இந்துக் கல்லூரி
ஆசிரியர் கழக

# கண்ணீர் அஞ்சலிகள்

எமது கல்லூரியில் நல்லாசிரியனாய்
நல்லதிபராய், பண்பிலே தெய்வமாய்,
பார்வையிலே கனிந்தவனாய்,
உற்ற நண்பனாய், நல்ல வழிகாட்டியாய் நின்று
கல்லூரியில் தனக்கென ஓரிடம் அமைத்த
உயர் சிந்தனையாளர்

## அமரர் மு. பேராயிரவர்

(B. A., Dip - in - Edu., C. E. S.)

அவர்களுக்கு

இதய அஞ்சலியை சமர்ப்பிப்பதுடன் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம் தலைவனை இழந்து தவிக்கும் குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

- ஆசிரியர் கழகம்

மானிப்பாய் இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.
27-01-1994

---

# மங்களகரமான திறப்பு விழா

உங்கள் தேவையே தன் சேவையென கருதி இன்று 27-01-94 (வியாழக்கிழமை) காலை 8 45—10-45 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில்

## ◎ சிறி படப்பிடிப்பு கலையகம் ◎

மங்கள கரமாக திறந்து வைக்கப்படுகின்றது.

* உட்புற வெளிப்புற படப்பிடிப்பு, நிழல் பிரதி பதித்தல் (போட்டோஸ்ரற்)
* VDO, ODO கசற்றுக்கள், பிலிம்றோல், பற்றறி வகைகள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

அர்ச்சுனா வீதி ஆரியகுளம்சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி/7046)

---

உங்களை மகிழ்விக்க மீண்டும்

# வீடியோ சண் VIDEO SUN

**27-01-1994** (வியாழன்)
இன்று முதல் ஆரம்பம்

எம்மிடம்

1) புதிய, பழைய தமிழ், ஆங்கிலத் திரைப்படப் பிரதிகளையும், ரீவி, டெக், ஜெனரேற்றர் என்பவற்றையும் வாடைக்குப் பெற்றிடவும்,
2) எமது தமிழீழக் கலைஞர்களால் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்ட ஒளிவீச்சு பிரதிகளை மாதந்தோறும் பெற்றிடவும்,
3) மின் இலத்திரனியல் உபகரணங்களை சிறந்த முறையில் சீர்செய்து பெற்றிடவும்,
4) மங்கள வைபவங்களை வீடியோப் படம் பிடித்திடவும்,
5) தமிழ், ஹிந்தி, ஆங்கிலத் திரைப்படப் பாடல்களை ஸ்ரீறியோ முறையில் பதிவு செய்து பெற்றிடவும்,
6) வர்ணப் புகைப்படங்களை நவீன கமரா மூலம் படம் பிடித்திடவும்.

இன்றே நாடுங்கள்:

**வீடியோ சண்**

நல்லூர் மார்கற்,
கல்வியங்காடு

(29114)

---

# ஆண்டுப் பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் **21 — 01 — 1994** வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற பொழுது பின்வரும் கௌரவ உத்தியோகத்தர்களும் 16 நிர்வாகசபை உறுப்பினர்களும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைவர் | — | வே. சிற்சபேன் |
| 2. | செயலாளர் | — | நா. த. அன்னலிங்கம் |
| 3. | பொருளாளர் | — | பொ. சந்திரலிங்கம் |
| 4 | உபதலைவர் | — | க. வி. குலரெத்தினம் |
| 5 | உபசெயலாளர் | — | கே. கே. இராசரெட்ணம் |

- யாழ். வர்த்தகர் சங்கம்

[சி-7201]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி சபாநாதன் வசந்தாதேவி

(நூலகர், உப அலுவலகம் - நாவற்குழி)

கடந்த 1993 - 12 - 28ஆம் திகதி சிவபதமடைந்த கைதடி நாவற்குழி கிராம உத்தியோகத்தர் திரு. இ. சபாநாதன் அவர்களின் துணைவியான திருமதி வசந்தாதேவி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து அஞ்சலி செய்கின்றோம்.

தென்மராட்சி பிரதேச செயலக-
உத்தியோகத்தர்கள்.

தென்மராட்சி
சாவகச்சேரி 1994-01-25.

(29125)

---

# இணுவை மஞ்ச உலா

காலம்: **27-1-94** (இன்று) நேரம் மாலை 6 மணி
பகல் அபிஷேக ஆராதனைகள் சண்முகப் பெருமானுக்கு நடைபெற்று மாலை 5 மணியளவில் சண்முகார்ச்சனை நடைபெற்று சண்முகப்பெருமான் சரித்திரப்பிரசித்திபெற்ற திருமஞ்சத்தில் எழுந்தருளுவார்.
திருமஞ்சத்தினைத்தரிசித்து சண்முகப் பெருமான் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

தேவஸ்தானத்தினர்
இணுவில் கந்தசுவாமி கோவில்

(6786)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## வெள்ளைத்தம்பி இராசம்மா

அன்னாரின் மறைவின் போது எமது துயரில் பங்கேற்று பல உதவி புரிந்தோருக்கு நன்றியை தெரிவிப்பதோடு இன்று (27/1/94) நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் அனைவரையும் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

சீராவளை கலட்டி,
மயிலிட்டி தனை,
தொண்டமனாறு.

(29127)

---

# மரண அறிவித்தல்கள்

## இராயப்பு அன்ரன்

(முன்னாள் R. V. D. B. உத்தியோகத்தர்)

இளவாலையைச் சேர்ந்தவரும், 43, பீரிஸ் றோட் கல்கிசையில் வசித்தவருமாகிய இராயப்பு அன்ரன் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராயப்பு (முன்னாள் R. V. D. B. எந்திரி) தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை (செல்லர்) அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், செல்வக்கிளியின் கணவரும், ஜெயந்தன், நிசாந்தன், ஆகியோரின் தந்தையுமாவார். நல்லடக்கம் கொழும்பில் 27-01-94 (இன்று) மாலை நடைபெறும். உற்றார், உறவினர் நண்பர்கள் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அன்ரன் பாலசிங்கம்.

171, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(29118)

## பெஞ்சமின் கிறீஸ்துதாஸ் எபிரகாம்

[Ben. C. Das. Abraham]

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபரும், அகில இலங்கை சத்திரிய சபா, அகில இலங்கை நெய்தல் மாநில சபை ஆகியவற்றின் செயலாளரும்)

யாழ். இல 38, 4ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பெஞ்சமின் கிறிஸ்துதாஸ் ஏபிரகாம் 26-01-94 அன்று காலமானார் இவர் றோஸ்மலர் மரியம்மாவின் அன்புக்கணவரும். திருமதி M R C. கொன்ஸ்ரன்ரைன் (ராஜி) [ஆசிரியை புனித சாள்ஸ்), திருமதி யோகேஸ்வரி மரியதாஸ், திருமதி எலிசபெத் பெனடிற் (ஆசிரியை கொழும்பு], அன்ரன் புவிராஜசிங்கி(பக்கு -கொழும்பு), சௌந்தரசிங்கி, ஏபன் வர்ணகுலசிங்கி, ரூபன் அரசகுலசிங்கி (I. C. R. C.)ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவரர்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27-01-94) மாலை 3 30மணியளவில் யாழ். புதுமைமாதா ஆலயத்தில் நடைபெற்று திருப்பலியின் பின்னர் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி றோஸ்மலர்
[மனைவி)

758, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[29122)

## திருமதி ஆறுமுகம் சிவமணி

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், தற்போது நெதர்லாந்தில் வசித்து வந்தவருமான திருமதி ஆறுமுகம் சிவமணி (ஓய்வு பெற்ற ஆசிரியை) 15-01-1994 அன்று நெதர்லாந்தில் காலமானார்.

இவர் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற கந்தையா ஆறுமுகத்தின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், பிரேமகுமாரன் (முன்னைநாள் இரசாயன பரிசோதகர். வாழைச்சேனை - த. முகவரி சுவிஸ்), ஆனந்தகுமாரன் (சுவிஸ்), ஜெயகுமாரன் (நெதர்லாந்து), விஜயகுமாரன் (ஜேர்மனி), சிவகுமாரன் (கனடா), தவக்குமாரன் (நோர்வே), செந்தில்குமாரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் துக்கதினம் கோப்பாய் வடக்கு, அப்பிளானையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி பரமேஸ்வரி செல்வராஜா
(பெறாமகள்)

கோப்பாய் வடக்கு,
அப்பிளானை,
கோப்பாய்.

(29121)

## சிற்றம்பலம் சின்னத்தம்பி

(இளைப்பாறிய ஆசிரியர், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சில்லாலையில் வசித்தவருமாகிய இவர் யாழ்ப்பாணத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் பிரபல விஷகடி வைத்தியர் சிற்றம்பலம் லக்சுமி தம்பதியரின் மகனும், காசிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை, நெல்லியடி ம. ம. வி- கண்ணாடி அக்கா)யின் அன்புக் கணவரும், பா. கதிர்மகள், சிவசிதம்பரம், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, மககள்
பா. கதிர்மகர்

114, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

(29126)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27-01-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org